தந்தைக்கு ஒரு மலர்

# "சிதம்பர நாதம்"



தொல்புரத்தை பிறப்பிடமாகவும்
சங்கரத்தையை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. கார்த்திகேசு சிதம்பரநாதன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

## நினைவு வெளியீடு

## 23.10.2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கல்வியோடு செல்வமும்

கணக்கில்லா நன்மை எல்லாம்

இத்தரணியில் எமக்கீர்ந்து

தாயில்லாக் குறைதனை

நாமறியாமல் வளர்த்தெடுத்த

எம் தந்தை நினைவுகளை

நினைவு மலராக்கி

அம்பாளின் திருப்பாத


கமலங்களில்

சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
28.10.1935

அமரர்

விண்ணில்
23.09.2005

# கார்த்திகேசு சிதம்பரநாதன்

(யாழ். இந்துக் கல்லூரி விடுதி மேற்பார்வையாளர்)

**அவர்கள்**

திதி நிர்ணய வெண்பா

பலன் பல தந்திடும் பார்த்திப ஆண்டு
நலன் பல செய்திடும் புரட்டாதி மாதம்
அபர பட்ஷ ஷஷ்டி திதியில்
அமரர் ஆனார் சிதம்பர நாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானை
காதலால் கூப்புவர் தம்கை.

## முருகன் துதி

முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியாதி அடைந்துநையார்
ஒருகா லமும் துன்ப முறார் பரகதி உற்றிடுவர்
பொருகாலன் நாடுபுகார் சமராபுரிப் புண்ணியனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாயிற்றுக்கிழமை

திருச்சிற்றம்பலம்

(2ஆம் திருமுறை) **தேவாரம்** பண் – சீகாமரம்
திருஞானசம்பந்தர்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்;
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே.

## திருவாசகம்

(8ஆம் திருமுறை) மாணிக்கவாசகர்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

(9ஆம் திருமுறை) பண் – காந்தாரம்
கருவூர்த்தேவர்

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே!

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை)

பண் – பஞ்சமம்
சேந்தனார்

மிண்டு மனத்தவர் போமின்கள்;
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்:
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின்; குழாம் புகுந்து
"அண்டங் கடந்த பொருளளவு இல்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் "
என்றே பல்லாண்டு கூறுதுமே!

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை)

சேக்கிழார்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகி,
பேதியா வேகமாகிப், பெண்ணுமாய் ஆணுமாகிப்,
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திங்கட்கிழமை

# தேவாரம்

(3ஆம் திருமுறை)

பண் – கொல்லி

திருஞானசம்பந்தர்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை;
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே!

# திருவாசகம்

(8ஆம் திருமுறை)

மாணிக்கவாசகர்

நானேயோ தவம்செய்தேன்? சிவாயநம எனப் பெற்றேன்
தேனாயின் அமுதமுமாய் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுளம் புகுந்து, அடியேற்கு அருள்செய் தான்
ஊன்ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து அன்றே வெறுத்திடவே

# திருவிசைப்பா

(9ஆம் திருமுறை)

பண் – சாளரபாணி

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளும் தானு மணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

சேந்தனார்

சொல்லாண்ட ருதிப்பொருள் சோதித்த
தூமனத் தொண்ட ருள்ளீர்!
சில்லாண்டில் சிதையும் சில
தேவர் சிறுநெறி சேராமே,
ல் ஆண்ட கனகத் திரள்
மேருவிடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதம்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை) சேக்கிழார்

தூயவெண் நீறு துதைந்தபொன் மேனியும், தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும், பதிகச்செஞ் சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய்க்கிழமை

## தேவாரம்

(4ஆம் திருமுறை) திருவிருத்தம்

திருநாவுக்கரசர் நாயனார்

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான்; இமையவர்க்கு அன்பன், திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன் அடியோங்களுக்கே!

## திருவாசகம்

(8ஆம் திருமுறை)

மாணிக்கவாசகர்

காலம் உண்டாகவே காதல்செய்து உய்மின்; கருதரிய
ஞாலம் உண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே!

## திருவிசைப்பா

பண் – சாளரபாணி (9ஆம் திருமுறை)

பூந்துருத்தி நம்பிகாடநம்பி

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம்மாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் னாடரங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

சேந்தனார்

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்;
பெற்றதார் பெறுவா ருலகில்?
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே!

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை) சேக்கிழார்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள,
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன்கிழமை

## தேவாரம்

(6ஆம் திருமுறை)

திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகம்

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பா ராகில்
தீ வண்ணர் திறம் ஒருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன் முன் மலர் பறித்திட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவார் றேதோவென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே!

## திருவாசகம்

(8ஆம் திருமுறை)

மாணிக்கவாசகர்

வேண்டத் தக்க தறிவோய் நீ!
வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன் மாற்க் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

சேந்தனார்

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என் உயிர்க் கமுதினை, எதிரில்
போக நாயகனை, புயல்வணற்கு அருளிப்
பொன்நெடும் சிவிகையா யூர்ந்த
மேக நாயகனை மிகு திருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே!

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான் :
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே !

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை) சேக்கிழார்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வு அரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழக்கிழமை

(7ஆம் திருமுறை)

## தேவாரம்

பண் – கொல்லி
சுந்தரர்

தம்மையே புகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே!

## திருவாசகம்

(8ஆம் திருமுறை)

மாணிக்கவாசகர்

அன்றே எந்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட
போதே கொண்டிலையோ?
இன்றோ ரிடையூ றெனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானே இதற்கு நாயகமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

கருவூர்த்தேவர்

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவைநூ, றாயிரங் கூறிட்டு
அத்திலங், கொருகூறு உன்கண்வைத் தவருக்கு
அமருல களிக்கும் நின் பெருமை
பித்தனென் றொருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

சேந்தனார்

தாதையைத் தாள் அற வீசிய
சண்டிக்கு அவ் வண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொன்
கோயிலும் போனகமும் அருளிச்
சோதி மணி முடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாத கத்துக்குப் பரிசுவைத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை) சேக்கிழார்

ஞானத்தின் திருவுருவை, நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக் கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிக்கிழமை

## தேவாரம்

(7ஆம் திருமுறை) பண் – தக்கேசி
சுந்தரர்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை யென் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறிய வொண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல்பழனத் தணி
ஆரூரானை மறக்கலு மாமே!

## திருவாசகம்

(8ஆம் திருமுறை) மாணிக்கவாசகர்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்
விரையார் கழற் கென்
கைதான் தலை வைத்து கண்ணீர்
ததும்பி, வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

(9ஆம் திருமுறை)

பண் – இந்தளம்
திருவாலியமுதனார்

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைத்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற்கு இட்டு
மின்னின் இடையாள் உமையள் காண
விகிர்தன் ஆடுமே.

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை)

பண் – பஞ்சமம்
சேந்தனார்

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவு வுஞ்சென்று விம்மி
மிகு திரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப் பிறந்த
பழவடி யாரொடும் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை)

சேக்கிழார்

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனின் உலகர்முன் வருகென் உரைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்கிழமை

## தேவாரம்

(4ஆம் திருமுறை) திருவிருத்தம்

திருநாவுக்கரசு நாயனார்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் னுள்ளமும் நானும் கிடந்தலந் தெய்த் தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவாலவாயா திருவாரூரா
ஒருபற் றிலாமையும் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

## திருவாசகம்

(8ஆம் திருமுறை) மாணிக்கவாசகர்

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்த் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்று நீ அல்லை; அன்றியொன் றில்லை!
யாருன்னை அறியகிற் பாரே!

## திருவிசைப்பா

(9ஆம் திருமுறை) பண் – பஞ்சமம்

கண்டராதித்தர்

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
"தெத்தே"யென்று வண்டுபாடும் தென்தில்லை யம்பலத்துள்,
அத்தா, உந்தன் ஆடல்காண அணைவதும் என்று கொலோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

(9ஆம் திருமுறை)

பண் – பஞ்சமம்
சேந்தனார்

நிட்டைஇலா வுடல்நீத்து என்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன்சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து,
அட்டமூர்த்திக்கு, என்அகம் நெகவூறும்
அமிர்தினுக்கு, ஆலநிழல்
பட்டனுக்கு, என்னைத்தன்பாற் படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

# பெரியபுராணம்

(12ஆம் திருமுறை)

சேக்கிழார்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்,

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன விருத்தி மாலை

**1. தனலெக்ஷ்மி**

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள் எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள் தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம்வைத்தாள் தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா

**2. ஆதிலெக்ஷ்மி**

சோதிமிக வுடையாள் சோம்பலற்ற மனமுடையாள் தாதியரின் புடைசூழ்த் தாவிவரும் தார்மிகத்தாள் பூதிமிகு மலரபய பூரண நல் வரதத்தாள் ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா !

**3. தான்யலெக்ஷ்மி**

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே பண்புடைய பகவதியே பலக்கதையும் பெற்றவளே கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா !

**4. வீரலெக்ஷ்மி**

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள் காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள் நீலத்திரை யமுதத்தாள் நீற்காநற் புகழுடையாள் மாலவனார் மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா !

**5. கஜலெக்ஷ்மி**

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடா அத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
வீடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. சந்தானலெக்ஷ்மி

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னையவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா

7. விஜயலெக்ஷ்மி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்கத் தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயே நீ போற்றியம்மா

8. ஐஸ்வர்யலெக்ஷ்மி

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே பெய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடி வாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா !

பலன் மொழி :

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்ட வெள்ளி மங்களத்தில் இருந்தபடி இருந்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும்; துணிவுபுகழ் அருகாகும்;
முட்டமுட்டப் பொருள் குவித்து முன்னின்று வாழ்ந்திடுவார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டலெட்சுமி வணக்கம்

எந்தத் தேவியானவள் சகல உயிர்களிலும் சக்தி உருவில் நிற்கிறாளோ அந்தத் தனலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் புத்தி உருவில் விளங்குகிறாளோ அந்த வித்யா லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் பசியைத் தீர்க்கும் தான்ய உருவில் உள்ளனளோ அந்தத் தான்யலெட்சுமியை நான் வணங்குகின்றேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் தைரிய உருவில் உள்ளனளோ அந்த வீரலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளனளோ அந்தச் சௌபாக்யலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகிறாளோ அந்தச் சந்தான லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் கருணை உருவில் காட்சி தருகிறாளோ அந்தக் காருண்யலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மங்கள நாயகியாய் விளங்குகிறாளோ அந்த மகாலெட்சுமியை நான் வணங்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கையர்க்கு ஏற்ற குங்குமக் கவசம்

இல்லத்தில் மாலைப்பொழுதில் விளக்கு ஏற்றி வைத்துக் குங்குமத் திலகம் இட்டுக் கொண்டு படிக்க ஏற்ற கவசம்.

குங்குமமாவது குறைகளைத் தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினை தீர்ப்பதே

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென் றோரைத் தடுத்தாட் கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபய மளிப்பதும்
காஞ்சி காமாக்ஷி கருணைக் குங்குமம்

நாற்பத மீவது நாரணிக் குங்குமம்
பொற்பினை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பர மாவது ஸ்ரீசக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைக் குங்குமம்

செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாக்ஷி கனிவாம் குங்குமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்த தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்

## சிந்தனைத் துளிகள்

* *200 ஆம் ஆண்டில் நடைபெற்ற சிட்னி ஒலிம்பிக்கில் அதிக தங்கப்பதக்கங்களைப் பெற்ற நாடு - அமெரிக்கா*
* இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர் முது தமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி
* நத்தை முட்டையின் நிறம் - மஞ்சள்
* உலகிலே அதிக மக்களைக் கொண்ட நாடு - சீனா
* உலகிலே குறைந்தளவு மக்களைக் கொண்ட நாடு - வத்திக்கான்
* இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சிகள் - துன்கிந்த, தியலும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு வழிபாடு

**இடம் அமைத்தல்**

மெழுகிக் கோலம் இட்டு மணை போடுதல் வேண்டும். அதன்மேல் துடைத்துத் துப்பரவாக்கித் திருமுழுக்காட்டிய திருவிளக்கை வைத்தல் வேண்டும். இடம் அமைக்கும் பொழுது அகங் குழைந்து அன்புடன் ஓத வேண்டிய திருப்பாட்டு

புகழ்ந்த கோமயத்து நீரால் பூமியைப் பொலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத் தீபம் ஏற்றி
நிகழ்ந்த அக் கதலி நீண்ட குருத்தினை விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற மன்னுவித்தார்.

**திருமுழுக்கு ஆட்டல்**

திருவிளக்கை உமியால் விளக்கித் துணியால் துடைத்தல் வேண்டும். பின்வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டே தூய குளிர்ந்த நீரால் திருமுழுக்குச் செய்தல் வேண்டும்.

வன்றிறல் உந்தை யோடும் மாவேட்டை யாடிப்பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக் குளிர்ந்த நீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டி முன்பு அறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன் செய்ததாகும் என்றார்.

**திருவெண்ணீறு இடல்**

திருமுழுக்குச் செய்த திருவிளக்கினை வெண்மையான மெல்லிய துணியால் துடைத்து "ஆறாறு மெய்யனைமேல் அமர்ந்தருள்க போற்றி" என்று ஓதிக்கொண்டே மணை மேல் வைத்தல் வேண்டும். வருந் திருப்பாட்டை ஓதிக் கொண்டே திருவெண்ணீற்றைத் தூய நீரால் குழைத்து உச்சியில் ஒரு பொட்டும், அதன்கீழ் மூன்றும் அதன்கீழ் இரண்டும், அடியில் இரண்டுமாக எட்டிடங்களில் பொட்டிடுக. உச்சி நெற்றியாகவும், மூன்றும் முக்கண்களாகவும், இரண்டும் இரு கைகளாகவும் அடியில் இரண்டும் திருவடிகளாகவும் கருதுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாரார் கொன்றை பொன் தயங்கச் சாத்திய மார்பகலம்
நீரார் நீறு சாந்தம் வைத்த நின்மலன் மன்னும் இடம்
போரார் வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசை பாடலினால்
பாரார் கின்ற பட்டினத்துப் பல்லவன் ஈச்சரமே!"

சந்தனம், குங்குமம், சாந்து முதலியவற்றால் திருப்பொட்டிடுக.

ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை
ஆன்அஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
தாளானைத் தன்ஒப்பார் இல்லா தானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடுபவர் கேடிலாரே.

கலவலஞ்சேர் கழிக்கானல் கதிர்முத்தம் கலந்தெங்கும்
அலவஞ்சேர் அணைவாரிக் கொணர்ந்தெறியும் அகன் துறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடையே நேரிழையாள் அவளோடும்
திலகஞ்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே.

**நெய் வார்த்தல்**

தூய எண்ணெயை "மடம்படும் உணர்நெய்யாம் மன்னே போற்றி" என ஓதிக் கொண்டு வார்க்க.

**திரியிடுதல்**

தூய பஞ்சுத்திரி அல்லது நூல்திரியை "உயிரெனும் திரிமயக்க உதவுவோய் போற்றி" என ஓதிக்கொண்டு வைக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏற்றல்**

தீக்குச்சியினால் "ஞானத் தீயால் எரிகொள இசைவாய் போற்றி" என ஓதிக்கொண்டு திருவிளக்கு ஏற்றுக

**பூச்சூட்டல்**

தூய மலர்களாகிய சரம், மாலை, கண்ணி முதலியவற்றை வரும் திருப்பாட்டை ஓதிச் சூட்டுக.

தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சாத்தி
ஆனிடை அஞ்சும் கொண்டு அன்பினால் அமர ஆட்டி
வானிடை மதியம் சூடும் வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று நல்வினைப் பயனுற் றேனே.

**எழுந்தருளப் பண்ணல்**

அம்மை அப்பராக விளங்கும் முழுமுதல்வன் பேரொளிப் பிழம்பாய் உள்ளவன். காணவும் கருதவும் கைகூப்பித் தொழவும் இத்திரு விளக்கின்கண் எழுந்தருள வேண்டுவோமாக. வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டு எழுந்தருளிய அடையாளமாக ஒரு பூ உச்சியிலும் ஒரு பூ திருவடியிலும் சாத்துக.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

**படைப்புப் படைத்தல்**

சிறப்பு நாட்களில் தேங்காய்,பழம், பொங்கல், சுண்டல், அவல், கடலை முதலியன கொள்க. நாள்தோறும் நெற்பொரியே நல்லது, அல்லது முந்திரிப்பழம், வெல்லம் முதலியனவும் கொள்ளலாம், படைப்பு நைவேத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்து
அன்ன என்றும் அமுதுசெய் விப்பரால்.

நீரால் படைப்பினை மும்முறை வலமாகச் சுற்றிவளாவுக

**மலர் தூவிப் போற்றல்**

நறுமலரேனும் வில்வம், துளசி, முதலிய தளிரேனும் தூயவாகக் கொணர்ந்து போற்றித்தொடர் ஓதி ஒவ்வொரு போற்றிக்கும் ஒவ்வொரு மலராக அர்ச்சிக்குக.

எல்லாம் சிவன் என்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாள் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டம் காதல் விமலா போற்றி
விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய் போற்றி
தூண்டு சுடரனைய சோதி போற்றி

சோதியே போற்றி சுடரே போற்றி
ஓதும் உள்ஒளி விளக்கே போற்றி
இருள்கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
சொல்லக விளக்காம் சோதி போற்றி
பலர்காண் பல்லக விளக்கே போற்றி
நல்லக நமசிவாய விளக்கே போற்றி
உலப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையக விளக்கே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத் தகளி விளக்கே போற்றி
மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி
ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
தோன்றிய பொருளுமாம் விளக்கே போற்றி
பேதியா ஏகமாகும் விளக்கே போற்றி
பெண்ணுமாய் ஆணுமாகும் விளக்கே போற்றி

போதியா நிற்கும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த சோதி போற்றி
கருணையே உருவாம் விளக்கே போற்றி
அற்புதக் கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
சிற்பர வியோம விளக்கே போற்றி
திருச்சிற்றம் பலத்து விளக்கே போற்றி
பொற்றுடன் நடஞ்செய் விளக்கே போற்றி
பூங்கழல் விளக்கே போற்றி போற்றி

போற்றி என்பார் அசுரர் விளக்கே போற்றி
போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி
போற்றி என்பார் மனித விளக்கே போற்றி
போற்றி என் அன்புபொலி விளக்கே போற்றி
விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே
ஜோதிமணி விளக்கே ஸ்ரீதேவி பொன்மணியே
அந்தி விளக்கே காமாட்சித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத் திரிபோட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளம்போல எண்ணெய் விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்
பொட்டுமிட்டேன் குங்குமத்தால் பூமாலை சூட்டி வைத்தேன்
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடிவிளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையுந் தான்விளங்க
மாளிகையில் சோதியுள்ள மாதாவைக்கண்டு மகிழ்ந்தேன்யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
பட்டி நிறையப் பாற்பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பைத் தந்து எந்தன் பக்கத்தில் நில்லுமம்மா
அகத்தெளிவைத் தந்தெனது அகத்தினிலே வாழுமம்மா
சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவங்கண்டேன்

வஜ்ரக்கிரீடம் கண்டேன் வைடூரியமேனி கண்டேன்
முத்துக்கொண்டை கண்டேன் முழுப்பச்சை மாலை கண்டேன்
சவுரிமுடி கண்டேன் தாழைமடல் சூடக்கண்டேன்
பின்னழகு கண்டேன் பிறைபோல நெற்றி கண்டேன்
சாந்திடும் நெற்றிகண்டேன் உன்தாயார் வடிவுகண்டேன்
குறுக்கிடும் நெற்றிகண்டேன் கோவைக்கனி வாயுங்கண்டேன்
செந்தாழைப் பூமடல்போல் செவியிரண்டுங் கண்டுகொண்டேன்
செண்பகப் பூப்போல திருமூக்கும் கண்டுகந்தேன்
மார்பில் பதக்கம் மின்ன மாலை அசையக் கண்டேன்
கைவளையல் கலகலென்ன கணையாழி மின்னக்கண்டேன்

பாட்டாடை தானுடுத்தப்படியிடையைக் கண்டு கந்தேன்
தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் காலாழி பீலி கண்டேன்
மங்களநாயகியே மனங்குளிரக் கண்டுகொண்டேன்
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்தவினை யகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாரே உந்தன் தாளடியில் நான் பணிந்தேன்
மாதாவே உந்தன் மலரடியில் நான் பணிந்தேன்
அன்பு மணி விளக்கே ஆதியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமணி விளக்கே ஈஸ்வரியே போற்றி
ஆதிப் பரஞ்சுடரே அம்மையே போற்றி
சோதி சொரூபியே சொல்விளக்கே போற்றி
சுடராகி எங்கும் நிறைந்தவளே போற்றி
இடர்களையும் இன்பமய சோதியே போற்றி
ஒளிவளர் விளக்கே போற்றி போற்றி
உலப்பிலா ஒன்றே போற்றி போற்றி
தெளிவளர் பளிங்கின் திரண்மணியே போற்றி
சித்தத்துள் தித்திக்கும் தேனே போற்றி
அளிவளர் உள்ளத்து ஒளியே போற்றி
ஆனந்தக் கனியே போற்றி போற்றி

அம்பலம் ஆடிய அப்பனே போற்றி
இம்மா நிலத்து இன்பமே போற்றி
விளக்கினை ஏற்றிய ஒளியே போற்றி
விளக்கினை விளக்கும் சுடரே போற்றி
மாலை விளக்காம் மதியே போற்றி
காலை விளக்காம் கதிரவ போற்றி
ஞால விளக்காய் நின்றாய் போற்றி
ஆலமர் செல்வனின் அன்பே போற்றி
சாலை விளக்காம் தனிச்சுடர் போற்றி
பாலைப் பொழியும் பரம்பொருள் போற்றி

பேரொளிப் பிழம்பாம் பொருளே போற்றி
காரொளி வண்ணா கண்ணா போற்றி
திருவடி மலரின் தீபமே போற்றி
ஒருவரு மறியா உட்சோதி போற்றி
சோதி சோதியுட் சோதியே போற்றி
பாதி உருவாம் பார்ப்பதி போற்றி
வேத விளக்காய் நின்றாய் போற்றி
நாத ஜோதியாய் நின்றாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

**1. சூரியன்**

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞானலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினை களைவாய்

**2. சந்திரன்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சற்குணா போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

**3. செவ்வாய்**

சிறப்புறுமணியே செவ்வாய் தேவே
குறைவிலாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனே அவதிகள் நீக்கு

**4. புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புத பகவானே பொன்னடி போற்றி
பதந் தந்தருள்வாய் பண்ணொலியானே
உதவியே யாளும் உத்தமா போற்றி

**5. குரு**

குணமிகு வியாழன் குரு பகவானே
மணமுள வாழ்வு மகிழ்வுடனருள்வாய்
பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா
கிரக தோஷமின்றி கடாட்சித்தருள்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6. சுக்கிரன்**

சுக்கிர மூர்த்தி சுப சுகமீவாய்
வக்கிரமின்றி வரமிகுந் தருள்வாய்
வெள்ளிச்சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

**7. சனி**

சங்கடந்தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவு இன்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தா தா

**8 ராகு**

அரவெனும் இராகு ஐயனே போற்றி
சிரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

**9. கேது**

கேதுத் தேவே கீர்த்தித்திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கம்பரை முத்துமாரியம்மன் கீர்த்தனை

கருணை வடிவழகி
காயத்ரி மஹாமாரி
திருவடி நம்பினேன்
தீன தயாபரி
அருளைப் பொழியும் மாரி
அம்பிகே மஹா மாரி
திருவளர் தொல்புரத்
தேவி சரணமம்மா.

# சங்கரத்தை பிட்டியம் பதி பத்திரகாளி அம்மன் கீர்த்தனை

அகிலலோக மாதா அன்னையே பத்ர காளி !
மகிமை தமிழிற்பாட மனமும் உருகுதம்மா !
சகலலோகம் துதிக்கும் சாமுண்டி திரிசூலி
மகிதலம் தனிலுந்தன் மலரடி பூஜை செய்யும்

சக்தி உன் சம்பந்தத்தால் சித்திபெறு வானேசிவன்
அத்துவிதங் கடந்த தத்துவ மானவளே !
முத்திக்கு வித்தான முழுமுதற் பொருள் நீயே !
சக்தி தருபவளே சங்கரத்தைப் பத்ர காளீ !

# மடத்துப் பிள்ளையார் திருவூஞ்சல்

பொன்னார்ந்த நாற்சுருதி கால்க ளாகப்
பொலியுசிவா கமம்வயிர விட்ட மாக
வன்னார்ந்த கலைஞானம் கயிற தாக
வளமார்ந்த ஓங்காரம் பீட மாக
மின்னார்ந்த துடியிடையாள் குஞ்ச ரியும்
மிளிர்குறத்தி ஸமேதராம் வேலனோடு
மன்னார்ந்த தெல்புரத்துச் சீக்காய் மேவும்
மாமடத்துப் பிள்ளையாரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கார்த்திகேசு சிதம்பரநாதன்
## அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்து செந்தமிழும் சைவமும் செழித்தோங்கும் யாழ்பாடி வாழ்ந்த யாழ்ப்பாணத்தின் திலகமென விளங்கும் தொல்புரத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த கனவானும் சிங்கப்பூரில் நிதிபரிபாலன உதவியாளராக பணியாற்றி ஓய்வு பெற்ற சின்னத்தம்பி கார்த்திகேசு அன்னலட்சுமி தம்பதிகளின் நான்காவது புத்திரனாக 1935 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் திகதி சிதம்பரநாதன் அவதரித்தார்.

இவருடன் வாலாம்பிகை, இராசம்மா, வள்ளி நாயகி, சரஸ்வதி, கனகாம்பிகை, சிவகாம்பிகை ஆகிய சகோதரிகளும் சண்முகநாதன், ஜெகநாதன், காசிவிசுவநாதன் பஞ்சாச்சரநாதன் ஆகிய ஆண் சகோதரர்களும் கூடப்பிறந்தவர்களாவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/ தொல்புரம் விக்கினேஸ்வராக் கல்லூரியிலும், உயர் கல்வியை யா/ விக்ரோறியா கல்லூரியிலும், யா/ இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

சிறிது காலம் கிளிநொச்சியில் கமச்செய்கையில் ஈடுபட்டார். பின்னர் யா/ இந்துக்கல்லூரியில் விடுதி மேற்பார்வையாளராக பதவியேற்று கடமைபுரிந்தார். இவரது தந்தையார் 1967 ஆம் ஆண்டு சிவபதமடைய தனது தாயையும் இளைய சகோதரியையும் பொறுப்பேற்று பராமரித்து வந்தார். 1971 ஆம் ஆண்டு இளைய சகோதரிக்கு திருமணம் செய்து வைத்தார்.

இல்லறத்தில் புகுந்து நல்லறத்தை நடத்தச் செய்வதற்காக 1971 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் சங்கரத்தையில் ப.மு. வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் ஏக புத்திரியாகிய லீலாவதியை திருமணம் செய்து "வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார்." இல்லறத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனாக 1972 ஆம் ஆண்டு வத்சலாவையும், 1974ஆம் ஆண்டு உஷாதேவியையும், 1977 ஆம் ஆண்டு குருபரன் ஆகிய நன்மக்கள் செல்வங்களை பெற்றெடுத்தார்.

"மனைத்தக்க மாண்புடை" மனைவியாக லீலாவதியையும் தம் பிள்ளைகளையும் செல்வச் செழிப்போடு தரணி போற்ற இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தார். தனது இல்லத்தரசியின் நோய் கண்டு மனைவியையும் பிள்ளைகளையும் கண்ணும் கருத்துமாக காப்பதற்காக தனது தொழிலையே துச்சமென நினைத்து 1984 ஆம் ஆண்டு பதவியைத் துறந்து குடும்பப்பணியுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

இவ்வேளையில் நோய் வாய்ப்பட்டிருந்த இவரது மனைவி லீலாவதி இவ்வுலக வாழ்வை 1985 ஆம் ஆண்டு நீத்து இறைபதம் அடைந்தார். துணைவியின் இழப்பின் பின் தளராது தன் பிள்ளைகளுக்கு எந்தையும் தாயுமாக இருந்து எல்லாச் செல்வத்தையும் வரவழைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்தார்.

தனது ஏக புத்திரியாகிய வத்சலாவிற்கு திருமணம் நிறைவேற்றும் பொருட்டு சிவசுப்பிரமணியம் தம்பதிகளின் புத்திரனான புவிந்திரகுமார் அவர்களுக்கு 1994 ஆம் ஆண்டு திருமணம் நிறைவேற்றி மகிழ்ந்தார். அத்துடன் புகழியா, ஆர்ருசியா, அச்சுதன், கிருசாந்தன் ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு பெருமகிழ்வை எய்தினார்.

தனது குடும்பப் பெறுப்புக்களுடனும் தனது சகோதரர்களின் நலனிலும் அக்கறையுடையவராக வாழ்ந்து வந்தார். அதன் பயனாக தனது சகோதரர்களுக்கும் தன்னாலான உதவிகளை செய்து சிறப்புக் கண்டார். அந்த வகையில் சகோதரர் சண்முகநாதன் கிளிநொச்சி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஊழியராகக் கடமையாற்றி அமரத்துவம் அடைந்துள்ளார். சகோதரர் ஜெகநாதன் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறி நியூசிலாந்தில் வாழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது சகோதரியாகிய ராசம்மா அவுஸ்திரேலியாவிலும் சகோதரியாகிய வள்ளிநாயகி வட்டுக்கோட்டையிலும் சகோதரியாகிய சரஸ்வதி அவுஸ்திரேலியாவிலும் வாழ்ந்து வருகிறார்கள் சகோதரனாகிய காசிவிசுவநாதன் ஆசிரியராகக் கடமையாற்றி தற்போது கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

சகோதரனான பஞ்சாச்சரநாதன் வடக்குக் கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்று திருகோணமலையில் வாழ்ந்து வருகிறார். சகோதரியான கனகாம்பிகை கொழும்பில் வாழ்ந்து வருகிறார். கடைசிச் சகோதரியான சிவகாம்பிகை கொழும்பில் வாழ்ந்து வருகிறார்.

இவரது புதல்வன் குருபரன் குரு வீடியோ போட்டோ ஸ்தாபனத்தின் உரிமையாளராவார். சிதம்பரநாதன் அவர்கள் வாழ்ந்து வரும் காலத்தில் தன்னை சமய சமூகப்பணிகளில் ஈடுபடுத்தி மக்களுக்காக மகத்தான தொண்டாற்றியுள்ளார். அந்த வகையில் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரிஅம்மன் கோவிலுக்கும், மடத்துப் பிள்ளையார் கோவிலுக்கும் சிறந்த சேவைகளை ஆற்றியுள்ளார். அது மட்டுமல்ல கூட்டுறவுச் சங்கங்களிலும், தேசிய சேமிப்பு வங்கியிலும் இணைந்து மக்களையும் இணைத்து அதன் பயனை அனுபவிக்கச் செய்த சிறந்த சமூக சேவையாளருமாக திகழ்ந்தார். வாழ்ந்து வரும் காலத்தில் ஏழைகளுக்காகவும் அனாதைச் சிறுவர் இல்லங்களிற்கும் உதவி செய்வதற்குப் பின்னிற்பதில்லை. இல்லையென்னாது ஈர்ந்த தருமசீலர். தனக்கு சரியெனப்பட்டதை நேருக்குநேர் உரைக்கும் இயல்பினர். உற்றார் உறவினர் சூழநிற்க 2005ஆம் ஆண்டு 23 ஆம் திகதி ஐப்பசி மாதம் பகல் 9.30 மணியளவில் இறை சூழலில் இணைந்து கொண்டார்.

"எல்லாம் அவன் செயல் அவனன்றி ஓர் அணுவும் அசையாது." இப்படியாக பலவகைச் சிறப்புகளுடன் வாழ்ந்த சிதம்பரநாதனின் ஆத்மா இறைவன் திருவடிகளில் இன்புற்று வாழப் பிரார்த்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

தொல்புரத்தில் வாழ்ந்த மலாயன் பென்சனியர்களில் அமரர் கார்த்திகேசரும் ஒருவராவார். அன்னார் கடவுள் பக்தியாகவும், ஆசாரசீலராகவும், ஒழுக்கமுடையவராகவும், தர்மசிந்தனையுள்ள வராகவும் வாழ்ந்து சகல செல்வங்களையும் பெற்று சிறப்புடன் வாழ்ந்த பெரியாராவார். இவர் தனது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையூட்டி இன்றும் அவர்கள் கல்விமான்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழ்கின்றார்கள் என்பது நாமறிவோம்.

இவருக்கு ஆண்பிள்ளைகளில் அமரர் சிதம்பரநாதனும் ஒருவராவார். அன்னார் கல்வி கேள்விகளில் சிறந்தும், ஒழுக்கம், தெய்வநம்பிக்கை, சமூகப் பணி, தர்மசிந்தனை முதலியவற்றில் சிறந்து விளங்கியது நாமும், ஊர் மக்களும் நன்கறிவோம்.

ஒழுக்கம் என்று குறிப்பிட்டால் அவரை யாரும் ஒழுக்கம் கெட்டவர் என்று சொல்லி நாம் அறியவில்லை. சமயப்பணிகள் என்றால் தொண்டு செய்வது. தமது மூதாதையர் ஆலயங்களில் செய்த உபயங்களை தொடர்ந்து செய்தல் வெளிநாட்டில் வாழும் சகோதரர் களினது சமயப்பணிகளை தான் பொறுப்பேற்று நடாத்துதல் முதலியன நாமறிவோம். உதாரணமாக வழக்கம்பரை அம்பாளின் ஆலயத்தில் நடைபெறும் குருபூசைகள் தமயனார் காசிவிசுவநாதன் பெயரில் நடைபெறுகின்ற காசிகாண்ட புராண படிப்பு, திருப்பணிக்கு உதவுதல் ஆலய உற்சவகாலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியார்களு க்கு தாக சாந்தி செய்தல் போன்றவையாகும்.

சமூகப்பணியில் ஆலயங்களின் சபைகளில் நிர்வாகசபை உறுப்பினராகவும் சனசமூக நிலையங்களிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேசியசேமிப்பு வங்கியில் தானும் இணைந்து பிறமக்களையும் சேர்த்து அதனுடைய பலனை மக்களையும் அனுபவிக்கச் செய்த பெரும் சமூக சேவையாளராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மத்தை எடுத்துக் கொண்டால் ஊனமுற்ற மக்களுக்காகவும் ஏழை மக்களுக்காகவும் ஆலயங்களிலும் சரி தன் வீட்டிலும் நடாத்தப்படுகின்ற அன்னதான பணியில் இவர்களுக்குக் கூடிய பங்களிப்பு செய்த தர்மவானாகவும் விளங்கியவர்.

மேற்கண்ட அன்னாரின் செயல்களினால் ஆண்டவன் திருப்தியடைந்து தனது பாதத்தில் சேர்த்து மேலும் உனக்கு பிறப்பில்லை என்பதை அருள் செய்துள்ளார்.

ஆகவே அமரர் சிதம்பரநாதன் அவர்களது செயல்களையும் உணர்ந்து மேலும் பிறப்பு வேண்டாம் என்றெண்ணி என்றும் செயற்பாடுகளைச் செய்வோமாக.

அமரர் சிதம்பரநாதனுடைய பிள்ளைகள் சகோதர சகோதரிகள், மருமக்கள், மைத்துனர்கள், உற்றார், உறவினர்கள் எல்லோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து எல்லோரும் அவரது ஆத்ம சாந்தியடைய அம்பாளை பிரார்த்திப்போமாக

"நன்மையே செய்வாய் நன்மையே அடைவாய்"

**சிவஸ்ரீ சுப்பிரமணிய சுந்தரராஜ**
**குருக்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்ததொரு செயல் வீரன்
# அமரர் கார்த்திகேசு சிதம்பரநாதன்

அமரர் அவர்கள் தொல்புரத்தில் என்னுடைய தாயாரின் வீட்டிற்கு அயலவர் ஆரம்பகாலம் தொட்டு எனது குடும்பத்திற்கும், அவரது குடும்பத்திற்குமிடையே தொடர்பு இருந்து வந்தது. அவருடைய தகப்பனார் கார்த்திகேசு அவர்களை தற்போதும் நல்ல ஞாபகம் உள்ளது. அவரது கம்பீரமான, மிடுக்கான "மீசை" அவருக்குத் தனி அழகும், வசீகரமுமாகும்.

அமரர் சிதம்பரநாதன் அவர்கள் ஒரு நல்ல பிரயாசையுள்ள மனிதர். சும்மா இருக்கக் கூடாது என அறிவுரை பலருக்கும் கூறுவார். அதைப்போலவே செய்தும் காட்டினார். சிறந்த சமூக சேவை யாளராகவும், சமயப்பணிகளிலும் ஈடுபட்டு வந்த உத்தமர். தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் உபயகாரராகவும், பரம்பரையாக தாக சாந்தி செய்து மகிழ்ச்சி கண்டு வந்தார். தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயநிதிச் சங்கத்தில் நிர்வாகசபை உறுப்பினராகவும், கணக்காய்வாளராகவும் இருந்து அளப்பரிய சேவையாற்றியவர். தொல்புரம் மடத்தடிப் பிள்ளையார் சுப்பிரமணியர் கோவில் தர்மகர்த்தாக்கள் சபையின் கணக்காய் வாளராகவும், பரிபாலனசபையின் நிர்வாகசபை உறுப்பினராகவும் நற்சேவையாற்றினார்.

இவரின் முக்கிய குணங்களில் ஒன்றும், எனக்குப் பிடித்ததுமானதும் "தனக்குச் சரியென்றதை நேருக்கு நேர் பயப்படாது கூறுவதாகும்" அத்துடன் விருந்தோம்பலில் முன்நிற்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் சுகயீன முற்றிருந்தபோது அம்பாள் இன்னும் சிறிது காலமாவது காப்பாற்ற வேண்டுமென நாம் எல்லோரும் அம்பாளை வேண்டினோம். காலம் யாரைத்தான் விட்டுவைத்தது.

அன்னாரது ஆத்மா நிச்சயமாக அம்பாளின் பாதார விந்தங்களில் சென்றடையும் என்ற நம்பிக்கையுடன் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆறுதல் கூறுகின்றேன்.

தி. உதயசூரியன்
சமாதான நீதவான்.

## பிறர் மனத்தைப் புண்படுத்தாதே

- எப்போதும் பிறரை நிந்திப்பதிலும், தூற்றுவதிலும், இகழ்வதிலும், அவர்களிடம் குற்றம் காண்பதிலும் ஈடுபடுவது சரியல்ல.
- இது மனிதருக்கே பிடிக்காது எனில் கடவுளுக்கு எப்படிப் பிடிக்கும்?
- இப்படிப் பிறரை தூஷிப்பது நம்மையே பாதிக்கும் என்பதை மறவாதீர்கள்.
- இன்று நீங்கள் சிரித்துக்கொண்டே பிறரை நிந்தித்தும், இகழ்ந்தும் பேசிக் கொண்டிருக்கலாம். ஆனால் அதுவே உங்கள் மீது வட்டியும் முதலுமாகத் திருப்பப்படும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- ஆகவே நிந்திப்பதும். அவமதிப்பதும். அவச் சொல்லால் பிறர் மனத்தைப் புண்படுத்துவதும் கட்டாயமாகத் தவிர்க்கப்பட வேண்டியவைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வங்களின் சொத்து

மண்ணின் பெருமை அங்கு அவதரிக்கும் மானிடர்களின் செயற்பாட்டினால் மிளிரும் வட்டுக்கோட்டையின் சிறப்பு அமரர் கார்த்திகேசு சிதம்பரநாதனின் கருமங்களினால் சிறப்புப் பெற்றுள்ளது என்பதுவே அப்பழுக்கற்ற உண்மையாகும். மண்ணிற்கு சுமையாக இருப்பதைவிட மண்ணிற்கு உரமாக இருப்பதுவே சிறப்பானது.

அமரர், அன்பு நெறியாளர் கா. சிதம்பரநாதனை கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேலாகவே நன்கு அறியக்கூடிய பாக்கியத்தை அடியேன் பெற்றிருந்தேன். வங்கியின் மூலம் தொடர்பினை ஏற்படுத்தப்பட்ட எமது உறவு அதற்கு மேலாகவே சென்றது. எமக்கு அருமைத் தந்தையாகவும், உற்றதோழனாகவும், நல்லாசானாகவும் இவற்றுக்கெல்லாம் மேலாக வங்கியின் சொத்தாகவே எம்முடன் இணைந்திருந்தார். மாதத்திற்கு ஒரு தடவையேனும் வங்கிக்கு வராமல் இருந்ததில்லை. வரும்போது எமது சக ஊழியர்களுக்கும் எனது குடும்பத்திற்குமான பரிசுப் பொதிகளை அலுக்காது எதுவித பிரதி உபகாரமுமின்றி சுமந்து வரும் நடை இன்று கண்களை குளமாக்கு கின்றது.

தனக்கென வாழாமல் பிறருக்கென வாழ்வதாக வெளிக் காட்டிவரும் இன்றைய சூழலில் சொல்லையும் செயலையும் இணைப்புப் படுத்தி வாழ்ந்த மாமனிதன் தான் இவர். தனது வாழ்வின் முடிவுக் காலப்பகுதியில் கூட உடல் நோய்வாய்ப்பட்டிருந்த அரசினர் வைத்தியசாலையில் தான் தங்கி சிகிச்சை பெற்றுவந்த விடுதியில் சக நோயாளர்கள் வெறும் தரையில் உறங்குவதை மனம் தாங்காமல் விரிப்புக்களை இலவசமாக வழங்கியதை உணர முடிகின்றது. இது போன்று மற்றவர்கள் அறியாமல் செய்த தானங்கள்தான் எத்தனையோ தன் செல்வங்கள் மீதும் ஊர்வாசிகள் மீதும் கொண்ட மட்டற்ற பாசமும் அன்பும் என்றும் அவரை நினைவுகூரும். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடையவும் அவர்தம் அன்புச் செல்வங்கள் நிறைவுடன் இனிதே வாழ்வும் என்றும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !**

**வி. அருளானந்தம்**
**முகாமையாளர்**
**தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனைப்பெயர்களுக்கான இடங்கள்

* ஏழு மலைகள் கூடிய நகரம் அழியாத நகரம் - உரோமபுரி
* பொற்கோயில் நகரம் - அமிர்தசரஸ் (இந்தியா)
* பொன்வாயில் நகரம் - சான் பிரான்சிஸ்கோ
* புயலடிக்கும் நகரம் - சிக்காக்கோ
* சூரியன் உதிக்கும் நாடு/காகித வீடு - ஜப்பான்
* நள்ளிரவுச் சூரிய நாடு - நோர்வே
* சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து
* இருண்ட கண்டம் / குகைவீடு - ஆபிரிக்கா
* உலகின் கூரை - திபெத்
* உலகின் சர்க்கரை கிண்ணம் - கியூபா
* எகிப்தின் கொடை - நைல் நதி
* மத்தியதரைக் கடலின் திறவுகோல் - ஜிப் றால்ரர்
* சீனாவின் துயரம் - குவாங்கோ நதி
* ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிற்சர்லாந்து
* ஐரோப்பாவின் நோயாளி - துருக்கி
* ஐரோப்பாவின் போர்க்களம் - பெல்ஜியம்
* பரிசுத்த பூமி - பலஸ்தீனம்
* இந்து சமுத்திர முத்து - இலங்கை
* மரகதத் தீவு - அயர்லாந்து
* தங்க போபுர நாடு - பர்மா
* ஐரோப்பாவின் கோழிக்கூடு- நெதர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* செங்கட்டி வீடு - சீனா
* குடிசை வீடு - வட அமெரிக்கா
* இடிமின்னல் நாடு - பூட்டான்
* ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
* புல்வீடு - ஹவாய்
* மூங்கில் வீடு - கலிபோர்னியா
* பனிக்கட்டி வீடு - கிறின்லாந்து
* கங்காருநாடு/ பற்றைவீடு/ தங்கப்போர்வைநாடு- அவுஸ்திரேலியா
* அதிகாலை அமைதி நாடு - கொரியா


## நாடுகளும் பறவைகளும்

| நாடுகள் | தேசியப்பறவை |
|---|---|
| * இலங்கை | காட்டுக்கோழி |
| * இந்தியா | ஆண்மயில் |
| * பிரிட்டன் | ராபின் |
| * அமெரிக்கா | கழுகு |
| * கனடா | வாத்து |
| * தென்னாபிரிக்கா | நீலக்கொக்கு |
| * ஜேர்மனி | வெள்ளைக்கொக்கு |
| * டென்மார்க் | வானம்பாடி |
| * ஹவாய் | குன்னவாத்து |
| * அவுஸ்திரேலியா | சவாலோ பறவை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




★அமரர்களைக் குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்



எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து

எம்மை விட்டு அணைந்த வேளையில் ஓடோடி வந்து

ஆறுதல் கூறி உதவி புரிந்த அயலவர், நண்பர்கள்,

உற்றார் உறவினர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி

செலுத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம்

வெளியிட்டவர்களுக்கும், வெளிநாடு உள்நாடுகளிலிருந்து

தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அன்னாரின்

இறுதிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும்

கலந்த சகல அன்புள்ளங்களுக்கும்

இம்மலரை அழகுற அச்சிட்ட கரிகணன் பிறிண்டேர்ஸ்

நிறுவனத்தாருக்கும், பல்வேறு வகைகளில் உதவிய அனைவருக்கும்

எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

நன்றி

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமகன்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org